“தமிழ் எங்கள் உயிருக்கு நேர்”

# தமிழ்க் கல்விச்சேவை சுவிற்சர்லாந்து
# Tamil Education Service Switzerland

# பொதுத்தேர்வு 2019

# தமிழ்மொழி ஆண்டு 12

**நேரம்: 150 நிமிடம்**

**சுட்டெண்:** ____________________

# பகுதி - 1

**1. மிகப்பொருத்தமான விடைக்குரிய கட்டத்திற்குள் புள்ளடி இடுக.**

1 2 3

1. இனவெழுத்துகள் இல்லாத எழுத்துத்தொகுதி
   1. உயிரெழுத்துகள்
   2. வல்லினமெய்யெழுத்துகள்
   3. இடையினமெய்யெழுத்துகள்
2. பெயர்ச்சொல்லாகவும், வினைச்சொல்லாகவும், இடைச்சொல்லாகவும் தொழிற்படும் சொல்
   1. வாடு
   2. ஆடு
   3. ஓடு
3. ஒலிம்பிக்போட்டிக்குச் சென்ற விளையாட்டுவீரர்குழு வெற்றியுடன்
   1. திரும்பினர்
   2. திரும்பியது
   3. திரும்பின
4. எண்பதாவது ஆண்டு நிறைவில் கொண்டாடப்பெறும் விழா
   1. பொன்விழா
   2. வெள்ளிவிழா
   3. அமுதவிழா
5. இராமன் தம்பி என்பதன் வேற்றுமை விரி
   1. இராமனின் தம்பி
   2. இராமனுக்குத்தம்பி
   3. இராமனது தம்பி
6. அணியிலக்கணத்தை மட்டும் விளக்கும் இலக்கண நூல்
   1. தொல்காப்பியம்
   2. நன்னூல்
   3. தண்டியலங்காரம்
7. குறிஞ்சி நிலத்துக்குரிய உரிப்பொருள்
   1. இருத்தல்
   2. பிரிவு
   3. புணர்தல்
8. பயனிலை மறைந்து நிற்கும் வாக்கியம்
   1. இளங்கன்று பயமறியாது
   2. காற்றிலே பறந்தது பசுந்திரள்
   3. நாளைக்கு எங்களுக்கு விடுமுறை
9. கி.பி. 300 தொடக்கம் கி.பி. 600 வரையிலான காலப்பகுதி
   1. சங்ககாலம்
   2. அறநீதி நூற்காலம்
   3. பக்தி இலக்கியகாலம்
10. ஈழத்துச் சிறுகதை வரலாற்றின் முன்னோடியாக விளங்கியவர்
    1. தேனுவரைப்பெருமாள்
    2. இலங்கையர்கோன்
    3. செங்கை ஆழியான்

1 2 3

11. அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்னும் ஐந்து நற்குணங்களும் அமையப்பெறுவது
    1. கயமை
    2. சால்பு
    3. சிறுமை

12. வினைத்தொகையாக அமைந்துள்ள தொடர்மொழி
    1. சுடுநீர்
    2. வாழ்க்கைத்துணை
    3 குமுதமலர்

13. யான் வந்தான். இதில் வந்துள்ள வழு
    1. திணை
    2. காலம்
    3. இடம்

14. மையீற்றுப் பண்புப்புணர்ச்சியில் தன்னொற்று இரட்டிக்கும் முறையில் புணர்ந்த சொல்
    1. பைம்பொழில்
    2. சிற்றூர்
    3. வெந்நீர்

15. உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் கற்றல் நன்று. இதில் உறு என்பது
    1. இடைச்சொல்
    2. உரிச்சொல்
    3. பெயர்ச்சொல்

16. பிரித்தானியரிடமிருந்து ஈழம் விடுதலை பெற்ற ஆண்டு
    1. 1945
    2. 1956
    3. 1948

17. வல்லினம் மிகும் இடங்களிலொன்று
    1. விளித்தொடர்
    2. உம்மைத்தொகை
    3. உவமைத்தொகை

18. ஒள் + நித்திலம் என்பதன் புணர்ச்சி வடிவம்
    1. ஒன்னித்திலம்
    2. ஒண்ணித்திலம்
    3. ஒள்நித்திலம்

19. ஒரு நூலின் உள்ளடக்கத்தைப்பற்றி நன்கு ஆராய்ந்து ஆற்றும் உரை
    1. திறனாய்வுரை
    2. தலைமையுரை
    3. வெளியீட்டுரை

20. 'வானினும் உயர்ந்தன்று' என்பதன் பொருள்
    1. வானை விட உயர்ந்தது
    2. வானை விடஉயர்ந்தது அல்ல
    3. வானிலும் உயர்ந்தது இல்லை

21. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் புறப்பொருளை மட்டும் கூறும் நூல்
    1. திரிகடுகம்
    2. களவழி நாற்பது
    3. ஐந்திணை எழுபது

1 2 3

22. 'கனக விசயரின் முடித்தலை நெறித்து கல்லினை வைத்தவர்...'
    1. சேரர்
    2. சோழர்
    3. பாண்டியர்

23. படித்தனன் என்ற வினைமுற்றின் பகுப்பு
    1. படி + த் + த் + அன்
    2. படி + த் + த் + அன் + அன்
    3. படி + த் + அன்

24. பூனையின் பெண் பெட்டை, அது போல குரங்கின் பெண்
    1. பிணை
    2. கடுவன்
    3. மந்தி

25. குற்றியலுகரமாக அமைந்த சொல்
    1. நாடு
    2. கதவு
    3. பசு

(25×1=25 புள்ளிகள்)

**2. சிறுகுறிப்பு எழுதுக.**

1. தமிழர் பண்பாடு

2. அகத்திணை

3. தவத்திரு தனிநாயகம் அடிகளார்



(3×2=6 புள்ளிகள்)

**3. திருக்குறளில் 'கேள்வி' எனும் அதிகாரத்தின் மூலம் திருவள்ளுவர் மக்களுக்கு எவற்றை எடுத்துக்கூறுகிறார்?**

(3 புள்ளிகள்)

**4. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. தெரிநிலைவினை, குறிப்புவினை என்பவற்றை எடுத்துக்காட்டுடன் விளக்குக. (2 புள்ளிகள்)

2. தமிழர்களின் புலப்பெயர்வுக்கான காரணங்களைத் தொகுத்து எழுதுக. (2 புள்ளிகள்)

3. ‘செம்புலப் பெயல் நீர் போல அன்புடை நெஞ்சம் தான் கலந்தனவே’ இப்பாடலடியிலிருந்து விளங்கிக் கொள்வது யாது? (2 புள்ளிகள்)

4. தொல்காப்பியம், நன்னூல் எனும் இரு இலக்கணநூல்களும் எவற்றைக் கூறுகின்றன? (1 புள்ளி)

5. பண்புத்தொகை என்றால் என்ன? அதன் வகைகளைத் தருக. (2 புள்ளிகள்)

6. தமிழ் இலக்கிய வரலாற்றை எழுதுவதற்கு சான்றுகளாக அமைபவை எவை? (1 புள்ளி)

7. ‘உயர்வு நவிற்சி அணி’ என்றால் என்ன? (1 புள்ளி)

8. தமிழ் வரலாற்றுநாவல் துறையின் தந்தை என அழைக்கப்பெறுபவர் யார்? இவர் எழுதிய நாவல்கள் இரண்டு தருக. (1 புள்ளி)

**5. கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

கொங்கு தேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி
காமம் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவும் உளவோ நீயறியும் பூவே.

1. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது? (1 புள்ளி)

_______________________________________________

2. தலைவன் தலைவியை எவ்வாறு புகழ்கிறார்? (1 புள்ளி)

_______________________________________________

3. தேனைத் தேர்ந்தெடுத்து வாழ்க்கை நடத்துவது எது? (1 புள்ளி)

_______________________________________________

4. இப்பாடலிலிருந்து பின்வருவனவற்றைத் தருக.

அ. அளபெடை _______________

ஆ. எதுகையணி _______________

இ. எதிர்மறை வினையெச்சம் _______________

ஈ. சினைப்பெயர் _______________ (1 புள்ளி)

5. இப்பாடலின் பொருளை உமது உரைநடையில் எழுதுக.

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________



(2 புள்ளிகள்)

**6. 'வாழ்க்கை என்னும் ஆற்றினிலே...' எனும் தலைப்பில் எட்டுவரிகளுக்குக் குறையாமல் ஒரு கவிதை**

**அல்லது**

**தமிழ்ப்பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றுவதற்கான விண்ணப்பக்கடிதம் ஒன்று எழுதுக.**

(4 புள்ளிகள்)

**7. கீழ்க்காணும் தலைப்புகளுள் ஒன்றினைப்பற்றி 175 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

1. தமிழர் வாழ்வும் சிற்றிலக்கியங்களும்
2. போக்குவரத்துச்சாதனங்கள் அன்றும் இன்றும்
3. இளங்கன்று பயமறியாது

(9 புள்ளிகள்)

## பகுதி - 2

**1. கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

மனித இனத்தின் வரலாற்றில் கல்வியின் முக்கியத்துவம் பரவலான முறையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது மிகவும் அண்மைக்காலத்திலேயாகும். கற்றவர்களுக்குச் சிறப்பும் மதிப்பும் சென்றவிடமெல்லாம் செறிந்திருந்தாலும் கல்வியானது ஒவ்வொருவரினதும் உரிமையாகும் என்பது முன்னர் உணரப்படவில்லை என்றால் மிகையாகாது. அக்காலத்தில் கல்வி ஒரு தானமாகக் கருதப்பெற்றது. அத்தானத்தைப் பெறுவதற்கு எல்லோருக்கும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. குறிப்பிட்ட தேவைகளைப் பூர்த்திசெய்ய குறிப்பிட்ட நிலையிலுள்ள சிலருக்கு மட்டுமே சிறப்பான கல்வி என்ற நிலையே பரந்திருந்தது. உயர் குழுவுக்கான கல்வி, ஆளும் வர்த்தகத்துக்கான கல்வி என்ற முறையில் கல்வியைப்பெற்றோர் தொகை ஒரு காலத்தில் கட்டுப்படுத்தப்பட்டே காணப்பட்டது. மற்றையோர் எல்லாம் சாதாரண தேவைகளை நிறைவு செய்வதற்கு உதவக்கூடிய ஆரம்ப அளவிலான அறிவை மட்டுமே பெற்றிருந்தனர். அதைத்தானும் பெறாதவர்களும் இருக்கத்தான் செய்தனர். அந்தக்காலமெல்லாம் இன்று பழங்கதையாகி கல்வியானது ஒவ்வொரு மனிதனதும் பிறப்புரிமையாகும் என்ற தாரக மந்திரம் வாழ்க்கைத் தத்துவமாகிவிட்டது. இந்நிலையில் உலகரீதியில் கல்வி தொடர்பாக அரசுக்கு இருக்கும் பொறுப்பையும் அவை செலுத்தும் கட்டுப்பாட்டையும் கவனிப்பது ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

1. முற்காலத்தில் கல்விபற்றிய சிந்தனை எவ்வாறிருந்தது? (1 புள்ளி)

______________________________________________

2. முற்காலத்தில் கல்வியைப் பெறும் வாய்ப்பினைப் பெற்றோர் யாவர்? (1 புள்ளி)

______________________________________________

3. இக்காலத்தில் கல்விபற்றிய கருத்து யாது? (1 புள்ளி)

______________________________________________

______________________________________________

4. கல்வி தொடர்பாக அரசுக்கு இருக்கும் பொறுப்பையும் அவை செலுத்தும் கட்டுப்பாட்டையும் கவனிக்க வேண்டியோர் யாவர்? (1 புள்ளி)

______________________________________________

5. அக்காலத்தில் கல்வி எவ்வாறு கருதப்பெற்றது? (1 புள்ளி)

______________________________________________

______________________________________________

6. இவ்வுரைப்பகுதியின் பிரதான கருத்துப்பற்றிய உமது எண்ணக்கருவினை தெளிவுபடுத்துக. (2 புள்ளிகள்)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

**2. கீழ்க்காணும் உரைப்பகுதிகளுள் உமக்குத்தெரிந்த மொழியிலுள்ள உரைப்பகுதியைப் படித்து அதன் தமிழாக்கத்தை எழுதுக.**

**Deutsch**

Alle Menschen, die auf diesem Planeten leben, haben das Befugnis mit allen Rechten zu leben. Heute werden in vielen Ländern Menschenrechte durch nationale sowie internationale Gesetze aufrechterhalten. Die internationale Menschenrechtsdeklaration, die die Menschenrechte aufrechterhaltet, wurde im Jahr 1948 an der Generalversammlung der UN angenommen. Diese Menschenrechtsdeklaration verhindert ungesetzliche Verurteilungen, Torturen, Unterdrückungen sowie Völkermord und versichert zudem gerechte Befragungen, Redefreiheit sowie das Recht auf Bildung. Wenn alle Länder diese Menschenrechtsdeklaration, welche basierend auf persönliche Rechte etabliert wurden, annehmen und richtig implementieren würden, würden weltweit keine Menschenrechtsverletzungen geschehen.

**Français**

Tous les êtres qui vivent sur terre ont le droit de vivre dans le respect de leurs droits. Aujourd'hui, dans de nombreux pays du monde, les droits de l'Homme sont protégés par les lois nationales et internationales. La Déclaration universelle des droits de l'Homme, qui a pour but de préserver les droits de l'Homme, a été acceptée par l'Assemblée Générale des Nations Unies en 1948. Cette déclaration interdit la détention illégale, la torture, l'esclavagisme, le génocide et institue le droit d'accès à la justice, le droit de s'exprimer et le droit à l'éducation. Si tous les pays appliquaient le respect de la Déclaration universelle des droits de l'Homme qui est un regroupement de différents droits individuels, il n'y aurait pas de violation des droits de l'Homme dans le monde.

**Italiano**

Tutti gli esseri viventi sulla terra hanno il diritto di vivere nel rispetto dei loro diritti.
Attualmente i diritti umani vengono rispettati in numerosi paesi, grazie alle numerose leggi nazionali e a quelle internazionali. La dichiarazione dei diritti universali, che ha come scopo di proteggere i diritti dell'uomo, venne adottata nel 1948 dall'assemblea generale delle Nazioni Unite. I seguenti diritti umani oltre ad impedire imprigionamenti illegali, maltrattamenti, schiavitù o genocidi, promuovono il diritto di accesso alla giustizia, il diritto d'espressione, e il diritto di istruzione. Se questa dichiarazione, riguardante i vari diritti umani, venisse accolta e applicata in tutte le nazioni del mondo, si potrebbe ridurre qualsiasi forma di violazione dei diritti.



(4புள்ளிகள்)

**3. கீழ்க்காணும் உரைப்பகுதியை மூன்றிலொரு பகுதியாகச் சுருக்கி எழுதுக.**

தமிழ்மொழியிலே உரைநடையும் உரைநடை இலக்கியமும் வளம்பெற்று விளங்கும் காலம் இருபதாம் நூற்றாண்டு எனக்கூறுதல் மிகையாகாது. தமிழ்நாட்டிலும் ஈழத்திலும் ஆங்கிலக்கல்வி விருத்தியடைந்ததன் பயனாகத் தமிழ்மொழி அடைந்த சிறப்புகளுள் உரைநடை வளர்ச்சியை முக்கியமானதொன்றாகக் கூறலாம். இந்நூற்றாண்டுக்கு முன் வழங்கி வந்த பலவகைப்பட்ட நடைகளோடு இப்பொழுது வழங்கிவரும் உரைநடையினையும் ஒப்புநோக்கிப் பார்க்குமிடத்திலேதான் இக்காலத்தில் உரைநடை மிக விரைவாக வளர்ச்சிபெற்று வருதலை நாம் தெளிவாகக் காணலாம். முற்காலத்திலும் பார்க்க விரைவாக இக்காலத்தில் தமிழ் உரைநடை முன்னேறிச் செல்வதற்குப் பல காரணங்கள் உள. ஒரு மக்கட் குழுவினர் பேசும் மொழியும் அம்மொழியில் எழும் இலக்கியமும் வளர்ந்து செல்லுதல் பெரும்பாலும் அவர்களுடைய வாழ்க்கை முன்னேற்றத்திலேயே தங்கி இருக்கின்றது. தமிழ் மக்களுடைய வாழ்க்கைமுறை இக்காலத்தில் விரைவாக மாறிக்கொண்டு செல்வதைப்போல பிறநாடுகளைப் பின்பற்றி நம்முடைய நாடும் இந்நூற்றாண்டிலே விரைவாக முன்னேறிச் செல்கின்றது என்பது தெளியத்தக்கது. சென்ற ஐம்பது ஆண்டுகளிலே தமிழ் மக்களுடைய வாழ்க்கை பலதுறைகளிலும் முன்னேறியிருத்தலால், அதற்கிசையத் தமிழ் இலக்கியமும் தமிழ் உரைநடையும் வளர்ச்சியுற்று வருவனவாயின், இந்நூற்றாண்டு பொதுமக்களின் அறிவு, ஆற்றல், ஆதரவு ஆகியவற்றிலே நாட்டின் ஆட்சியும் ஆக்கநலனும் தங்கியுள்ள காலமாகும். சமுதாய வாழ்க்கையில் அம்மக்கள் முக்கிய இடம் வகிக்கும் காலம் இதுவாதலின் இப்பொழுது அவர்களுக்கு உதவக்கூடிய வகையிலே உரைநடை வளர்ந்து வருதலை நாம் காண்கின்றோம்.

(4 புள்ளிகள்)

இறுதிப்புள்ளிகள்

| பணியகப் பயன்பாட்டிற்கு; | | | |
| --- | --- | --- | --- |
| விடைத்தாள் மதிப்பீடு | முழுப்பெயர் | கையொப்பம் | மொத்தப்புள்ளி |
| முதலாம் முறை | | | |
| இரண்டாம் முறை | | | |
| இறுதிப்புள்ளிகள் | | | |